(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO.386/2021

**Depostitions of PW- 2 Witness for**

| | |
|---|---|
| Name | புஷ்பராணி |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of April 2024.

Signature of Witness.

03.04.2024

6ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை–**

நான் திருவில்லிபுத்தூர் ரைட்டன் பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 செல்வராஜ் எனது உடன் பிறந்த அண்ணன் ஆவார். எதிரிகளைத் தெரியும். 24.05.2020 அன்று எனது மகன் வனராஜ் சரக்கடித்துவிட்டு என்னிடம் வந்து ஒரே சண்டையாக போட்டுக்கொண்டிருந்தான். அப்போது எனது மகனை நானும், எனது கணவர் சேவியரும் எனது மகனை ஏன் சரக்கடித்துவிட்டு சண்டை போடுகிறாய் என்று சத்தம்போட்டோம். அப்போது எனதுஅண்ணன் அ.சா. 1 அவரது மகளுக்கு தலைக்கு தண்ணீர் ஊற்றும் நிகழ்ச்சியை சொல்வதற்காக அங்கு வந்தார்.

எனது வீட்டிற்கு எனது அண்ணன் வரும்போது நானும், எனது கணவரும் எனது மகனை காளியம்மன் கோவிலுக்கு பின்னாடி வைத்து சத்தம் போட்டுக்கொண்டிருந்தோம். அப்போது அ.சா. 1 எதற்காக படிக்கிற பையனை ரோட்டில் வைத்து சத்தம்போட்டுக்கொண்டு இருக்கிற என்று என்னிடம் சொன்னார். சரக்கடித்துவிட்டு பழக்கம் இல்லாத பசங்களோடு சேர்ந்து கொண்டு இப்படி செய்கிறான் என்று சொன்னேன். அப்போது எனது அண்ணன் எனது மகனை எதற்கு இப்படி குடித்துவிட்டு சத்தம்போடுகிற என்று கேட்டார். அப்போது எனது அண்ணன் யாருடன் சேர்ந்துகொண்டு இப்படி குடித்துவிட்டு சண்டபோடுகிறாய் என்று கேட்டவுடன் எதிரிகள் அனைவரும் சேர்ந்து எனது அண்ணனை அடித்துவிட்டார்கள். ஒரு நபர் எனது அண்ணனை அடித்து கிழே தள்ளிவிட்டார், ஒரு நபர் எனது அண்ணனை இடது பக்க நெற்றியில் அடித்து மண்டையை உடைத்துவிட்டார். மற்ற நபர்கள் கை, காலால் எனது அண்ணனை அடித்துவிட்டார்கள். நீ எதற்கு எங்கள் தெருவிற்கு வருகிறாய் என்று சொல்லி அடித்தார்கள். எனது அண்ணனுக்கு இரத்தம் வந்துவிட்டது. நானும், எனது கணவரும் கத்தினோம். அ.சா. 1 ன் மனைவிக்கு தகவல் சொல்லி அவரும் சம்பவஇடத்திற்கு வந்தார். பின்பு காயம்பட்ட எனது அண்ணனை திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தோம். இரவு 10.00 மணிக்கு போலீசார் வந்து விசாரித்தார்கள். அவர்களிடம் நடந்ததை நாங்கள் சொன்னோம். நாளை முடிவு சொல்கிறோம் என்று சொல்லிவிட்டு 26ம் தேதி மனு எழுதி போலீசாரிடம் புகார் கொடுத்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். இரண்டு நாட்கள் கழித்து மதுரை அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்று எனது அண்ணனுக்கு சிகிச்சை செய்யப்பட்டது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

ரைட்டன் பட்டி கிராமத்தில் பெரும்பாலும் ஆட்கள் கூலி வேலைக்குதான் செல்வார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் தெருவில் சம்பளம் வாங்குவதற்காக ஆட்கள் கூட்டமாக இருப்பார்கள் என்றால் இல்லை,

சற்று தள்ளி நின்றார்கள். சம்பவம் நடந்த இடத்தின் அருகே வீடு, கடை உள்ளதென்றால் வீட்டில் இருந்த நபர் சென்னைக்கு சென்றிருந்தார். கடை அப்போது பூட்டி இருந்தது. கோவிந்தராஜ் கடை பூட்டி இருந்ததென்றால் அந்த கடை தள்ளியுள்ளது. சம்பவம் நடந்த இடத்தில் உள்ள கடை தான் பூட்டி இருந்தது. நான் எனது மகனை சத்தம்போட்ட போது எதிரிகள் என்னுடன் பிரச்சனை செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் சற்று தள்ளி நின்று எதிரிகள் எங்களை சத்தம்போடக்கூடாதென்றும், உனது மகனை வேண்டுமானால் வைது கொள் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதை போலீசார் விசாரணையிலும் நான் சொன்னேன். எனது மகன் எதிரிகளுடன் தான் கொத்தனார் வேலைக்கு போவார் என்றால் சரியல்ல. எனது மகன் யார்கூப்பிட்டாலும் வேலைக்கு போவார். எதிரிகளுடன் வேலைக்கு போனதில்லை. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எனது அக்கா மருமகன் ரவி என்பவரை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சண்டை நடந்தபோது அ.சா. 1ன் தம்பியும், அவரது மனைவியும் தான் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்றால் நானும், எனது கணவரும் சேர்ந்து விலக்கிவிட்டோம். வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல .